**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6.**

**மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு–மார்ச்/ ஏப்ரல் 2023**

**பொருளியல் விடைக்குறிப்புகள்**

குறிப்பு:–

1. நீலம் அல்லது கருப்பு நிற மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.
2. பகுதி I-ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.
3. விடை குறியீடு அல்லது விடை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று தவறாக இருப்பின்,அதற்கு 0 மதிப்பெண் மட்டுமே வழங்க வேண்டும்.
4. மாணவர்கள் தங்கள் சொந்த நடையில் கருத்துருக்களை தெளிவாக எழுதியிருந்தால் முழு மதிப்பெண்கள் வழங்கவும்

மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: **20×1=20**

| A வகை | | | B வகை | | | |
|---|---|---|---|---|---|---|
| வினா எண். | விடைக் குறியீடு | விடைகள் | வினா எண். | விடைக் குறியீடு | விடைகள் | மதிப் பெண் |
| 1 | அ | நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல் | 1 | ஈ | (அ) மற்றும் (ஆ) | 1 |
| 2 | இ | National Institution for Transforming India | 2 | ஆ | ஒருமை மற்றும் பன்மை | 1 |
| 3 | இ | சேமிப்பு | 3 | ஈ | மேற்கூறிய அனைத்தும் | 1 |
| 4 | அ | வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது | 4 | அ | 2030 | 1 |
| 5 | ஈ | பொருளாதார நலன் | 5 | ஈ | வருவாய் கோட்பாடு | 1 |
| 6 | ஈ | வருவாய் கோட்பாடு | 6 | அ | நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல் | 1 |
| 7 | ஈ | மேற்கூறிய அனைத்தும் | 7 | அ | வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது | 1 |
| 8 | அ | அங்காடி விதி | 8 | ஆ | சந்தையிடா பொருட்கள் | 1 |
| 9 | ஈ | அமெரிக்கா | 9 | அ | அங்காடி விதி | 1 |
| 10 | இ | வணிகச் சுழற்சி | 10 | இ | ரூ.500 மற்றும் ரூ.1000 | 1 |
| 11 | ஆ | ஒருமை மற்றும் பன்மை | 11 | ஈ | அமெரிக்கா | 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | இ | ரூ.500 மற்றும் ரூ.1000 | 12 | இ | National Institution for Transforming India | 1 |
| 13 | ஈ | (அ) மற்றும் (ஆ) | 13 | இ | சுங்கவரி ஒன்றியம் | 1 |
| 14 | ஆ | சந்தையிடா பொருட்கள் | 14 | இ | மொத்த பண அளிப்பு | 1 |
| 15 | இ | மொத்த பண அளிப்பு | 15 | இ | சேமிப்பு | 1 |
| 16 | இ | சுங்கவரி ஒன்றியம் | 16 | இ | கட்டமைப்பு | 1 |
| 17 | ஈ | உலக வங்கி | 17 | ஈ | பொருளாதார நலன் | 1 |
| 18 | இ | கட்டமைப்பு | 18 | இ | ஜுலை 1, 1963 | 1 |
| 19 | அ | 2030 | 19 | ஈ | உலக வங்கி | 1 |
| 20 | இ | ஜுலை 1, 1963 | 20 | இ | வணிகச் சுழற்சி | 1 |

## பகுதி –II

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும். **7×2=14**

| | | |
|---|---|---|
| 21 | <u>பொருளாதார மாதிரி</u><br>உண்மை சூழலை எளிமையாக பிரதிபலிப்பது.<br>(அல்லது)<br>மாதிரி என்பது, பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது | 2 |
| 22 | **<u>GDP குறைப்பான்</u>**<br>GDP யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும்<br>(அல்லது)<br>$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$ | 2 |
| 23 | சே விதியில் ஏதேனும் நான்கு எடுகோள்களை பட்டியலிடுக<br>1. ஒரு தனி வாங்குவோரோ, விற்பவரோ அல்லது உள்ளீடோ பொருளின் விலையைமாற்ற முடியாது.<br>2. முழு வேலை நிலை நிலவும்.<br>3. மக்களின் விருப்பங்கள் பொருளாதார முடிவுகளை நிர்ணயிக்கின்றன.<br>4. சந்தைச் சக்திகளே அனைத்தையும் நிர்ணயிக்கின்றன.<br>5. நிறைவுப் போட்டி நிலவும்.<br>6. கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு.<br>7. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்.<br>8. இது நீண்டகால பகுத்தாய்வு.<br>9. அதிக உற்பத்திக்கோ வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.<br>10. பயன்படுத்தப்படாத வளங்கள் இருந்தால், முழு வேலை வாய்ப்புவரை பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும்.<br>11. அரசின் தலையீடு தேவை இருக்காது.<br>12. வட்டி வீத நெகிழ்வுத் தன்மை சேமிப்பிற்கும், முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும் (ஏதேனும் நான்கு மட்டும்) | 2 |

<table>
<tr><td>24</td><td><u>பெருக்கி</u><br>தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம்.<br>(அல்லது)<br>$\mathrm{K} = \frac{\Delta y}{\Delta I} \quad (or) \quad K = \frac{1}{1 - MPC} \quad (or) \quad K = \frac{1}{MPS}$</td><td>2</td></tr>
<tr><td>25.</td><td><u>பணம் – இலக்கணம்</u><br>“ பணம் எதைச் செய்கிறதோ, அதுவே பணம்”<br>– வாக்கர்<br>(அல்லது)<br>கிரௌதர் – இலக்கணம்</td><td>2</td></tr>
<tr><td>26.</td><td><table><tr><th>CRR</th><th>SLR</th></tr><tr><td>மொத்த வைப்புத் தொகையில் வணிக வங்கிகள், மைய வங்கியில் ரொக்கமாக வைத்திருக்க வேண்டிய அளவின் வீதம்</td><td>மொத்த வைப்பில் வணி வங்கிகள் கண்டிப்பாக ரொக்கப்பணம், தங்கம் மற்றும் உறுதிப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டதாக வைத்திருக்க வேண்டும்.</td></tr></table></td><td>2</td></tr>
<tr><td>27.</td><td><u>அயல்நாட்டு செலுத்து நிலை:</u><br>ஒரு நாடு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கை.</td><td>2</td></tr>
<tr><td>28</td><td><u>சார்க்</u><br>1) நேபாள் தலைநகரம் காட்மண்டு<br>2) ஜனவரி 16, 1987</td><td>1<br>1</td></tr>
<tr><td>29</td><td><u>சமூக குறியீடுகள்</u><br>1. மக்களின் சுகாதாரம்<br>2. கல்வி<br>3. உணவு<br>4 குடிநீர்<br>5. துப்புரவு மற்றும்<br>6. வீட்டு வசதி ஆகியவையாகும்.</td><td>2</td></tr>
</table>

| 30 | விவரிப்பு புள்ளியியல் | உய்த்துணர்வு புள்ளியியல் | |
|---|---|---|---|
| | 1) ஆய்வில் உள்ள முழுத் தொகுதியையும் விளக்குகின்றது | மாதிரி ஆய்வின் அடிப்படையில் முழுத் தொகுதி பற்றி முடிவெடுக்கப்படுகின்றது | 2 |
| | 2) புள்ளி விவரங்களை வரைபடங்களாகவும் விளக்கப்படங்களாகவும் வழங்குகின்றது | கருதுகோள்களை சோதனை செய்து கணிக்கின்றது | |
| | 3) புள்ளிவிவரங்களின் சுருக்கங்களைத் தருகின்றது | மாதிரியைத் தாண்டி முழுத் தொகுப்பினை அறிந்து கொள்ள பயன்படுகின்றது. | |
| | | (ஏதேனும் இரண்டு மட்டும்) | |

## <u>பகுதி –III</u>

| ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்<br>(வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும் 7×**3=21** | | |
|---|---|---|
| 31 | <u>சமத்துவத்தின் குறைகள்</u><br>1. சிகப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம்<br>2. ஊக்கமின்மை<br>3. தெரிவு செய்வதில் சுதந்திர குறைவு<br>4. அதிகாரம் குவிதல் | **3** |
| 32 | <u>காரணி செலவில் **NNP**</u><br>உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல்.<br>காரணி செலவில் NNP = ( சந்தை விலையில் NNP<br>– மறைமுகவரி + மானியம் ) | **3** |
| 33 | தொகு தேவை<br>உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே தொகு தேவை<br>AD=C+I+G+(X-M)<br>C = நுகர்வுத் தேவை<br>I = முதலீட்டுத் தேவை<br>G = அரசுத் செலவு<br>(X-M) = நிகர ஏற்றுமதி | 2<br><br>1 |

<table>
<tr><td>34</td><td>தன்னிச்சையான முதலீடு</td><td>தூண்டப்படுகிற முதலீடு</td><td></td></tr>
<tr><td></td><td>தன்னிச்சையானது</td><td>திட்டமிடப்பட்டது</td><td>1</td></tr>
<tr><td></td><td>வருவாயைப் பொறுத்து நெகிழாதது</td><td>வருவாயைப் பொறுத்து நெகிழ்வது</td><td>1</td></tr>
<tr><td></td><td>நல நோக்கமுடையது</td><td>இலாப நோக்கமுடையது</td><td>1</td></tr>
<tr><td>35</td><td colspan="2"><u>தேவை இழுப்பு பணவீக்கம்</u><br>அளிப்பு நிலையாக உள்ள நிலையில், பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் பொழுது விலைவாசி உயருகின்றது.<br><u>செலவு உந்து பணவீக்கம்</u><br>உற்பத்தியில் மூலப்பொருட்கள் மற்றும் இதர இடுபொருட்களுக்கான செலவு உயரும் பொழுது உற்பத்தி செலவு கூடி பொருட்களுக்கான விலை அதிகரிக்கின்றது</td><td>3</td></tr>
<tr><td>36</td><td colspan="2"><u>நபார்டின் பணிகள்</u> (ஏதேனும் மூன்று )<br>1. விவசாயம், சிறுதொழில் குடிசை மற்றும் கிராம தொழிலாளர்களுக்கு மறுகடன் வழங்குகிறது.<br>2. மாநில கூட்டுறவு வங்கி, வட்டார ஊரக வங்கி, நிலவள வங்கிகளுக்கு குறுகிய, மத்திய, நீண்ட கால கடன் வழங்குகிறது<br>3 மாநில அரசுக்கு 20 ஆண்டு நீண்ட கால கடன் வழங்குகிறது.<br>4. மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு நீண்ட கால கடன் வழங்குகிறது.<br>5. இது மத்திய மாநில அரசு மற்றும் நிதி ஆயோக்கினை ஒருங்கிணைக்கிறது.<br>6. வேளாண்மை ஊரக வளர்ச்சி ஆய்வுகளை மேம்படுத்துகிறது</td><td>3</td></tr>
<tr><td>37.</td><td colspan="2"><u>பன்னாட்டுப் பொருளியல் உள்ளடக்கம்</u> (ஏதேனும் மூன்று )<br>1. தூய வாணிபக் கோட்பாடு<br>2. கொள்கைச் சச்சரவுகள்<br>3 பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்<br>4. பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள்</td><td>3</td></tr>
<tr><td>38</td><td colspan="2"><u>பிரிக்ஸ் மாநாடு 2018</u><br>1. உள்ளடக்கிய வளர்ச்சி<br>2. வாணிபப் பிரச்சனைகள்<br>3. உலகளாவிய அரசு நிர்வாகம்<br>4. பகிரத்தக்கவளமை<br>5. நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு</td><td>3</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 39 | <u>புள்ளியியலின் பணிகள்</u> (ஏதேனும் மூன்று )<br>1. விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.<br>2. பரந்த விவரங்களை சுருக்கித் தருகிறது.<br>3. ஒப்பீடுகளைச் செய்ய உதவிகிறது.<br>4. எடுகோள்களை உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது.<br>5. மதிப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.<br>6. கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது. | 3 |
| 40 | <u>சரத்து 269–இன்படி</u> (ஏதேனும் மூன்று )<br>1 விவசாய நிலம் தவிர்த்த இதர சொத்துக்கள் மீதான வரி.<br>2. பண்ணை வரி.<br>3. இரயில்வே கட்டணங்கள் மற்றும் சரக்கு கட்டணங்கள்.<br>4. பங்குச் சந்தை மற்றும் எதிர்கால சந்தை பரிவர்த்தனைகளில் முத்திரை வரிகளை தவிர வேறு வரி.<br>5. செய்திதாள் மீதான வரி.<br>6 இரயில், கடல் வழி மற்றும் ஆகாய மார்க்கமாக செல்லும் பயணிகள் மற்றும் சரக்குகள் மீதான வரி.<br>7. மாநிலங்களுக்கிடையேயான பண்டங்கள் விற்பனை மற்றும் வாங்குதல் மீதான வரி | 3 |

## பகுதி –IV

<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்</u> 7 × **5 = 35**

41 (அ) **பொருளாதார அமைப்புகள் – தன்மைகள் ஒப்பிடுதல்** (ஏதேனும் ஐந்து) — 5

| தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|
| உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்ட முறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சம நிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| நிறுவன தன்மை | தனியார் | அரசு | தனியார் மற்றும் அரசு |
| பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாடுடன் சுதந்திரம் |
| முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

| | | |
|---|---|---|
| (அல்லது) | | |
| 41 (ஆ) | **தேசிய வருவாய் கணக்கிடும் முறைகள்:**<br>1. உற்பத்தி முறை<br>2. வருமான முறை<br>3. செலவு முறை<br>**(விளக்கத்துடன்)** | 5 |
| 42 (அ) | <u>வேலையின்மையின் வகைகள்</u><br>1. வாணிபச் சூழல் வேலையின்மை<br>2. பருவகால வேலையின்மை<br>3. தற்காலிக (அ) உடன்பாடில்லா வேலையின்மை<br>4. கற்றோர் வேலையின்மை<br>5. தொழில் நுட்ப வேலையின்மை<br>6. அமைப்புசார் வேலையின்மை<br>7. மறைமுக வேலையின்மை **(ஏதேனும் 5 விளக்கத்துடன்)**<br>(அல்லது) | 5 |

| 42 (ஆ) | | மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறன் | முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித்திறன் | |
|---|---|---|---|---|
| | 1. | மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொறுத்து அமைகிறது. | மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மாற்றத்தைப் பொறுத்து அமைகிறது. | 1 |
| | 2. | ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது | ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது. | 1 |
| | 3. | X அச்சில் மூலதன இருப்பு | X அச்சில் முதலீடு அளவு | 1 |
| | 4. | இருப்பு | ஓட்டம் | 1 |
| | 5. | ஒவ்வொரு வட்டி வீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது. | ஒவ்வொரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. | 1 |

| | | |
|---|---|---|
| 43 (அ) | <u>கீன்ஸின் உளவியல் விதி</u><br>1. கீன்ஸின் உளவியல் விதி<br>2 அனுமானங்கள்<br>3. அட்டவணை<br>4. வரைபடம் மற்றும் விளக்கம் | 1<br>1<br>1<br>2 |

| (அல்லது) | | | | |
|---|---|---|---|---|
| 43 (ஆ) | | கீன்ஸியம் | தொன்மையியம் | |
| | 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை | |
| | 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது. | |
| | 3. | பணத்தின் பணி என்பது ஒருபுறம் பரிமாற்றத்திற்கு உதவும், மறுபுறம் சேமிக்க கூடியதாகவும் செயல்படும். | பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும். | |
| | 4 | பேரியல் அணுகுமுறை | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்குத் தீர்வு காணும்முறை | |
| | 5. | அரசு தலையீடு | தலையிடாக் கொள்கை | |
| | 6. | எல்லாச் சூழ்நிலைக்கும் முழு வேலைவாய்ப்பு மற்றும் குறை முழு வேலை வாய்ப்பு பொறுத்தமானது | முழு வேலைபாய்ப்புச் சூழலுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது. | |
| | 7. | முரண்பாடுகளைக் கொண்டது முதலாளித்துவம். | முதலாளித்துவம் சரியானது. | |
| | 8. | பொருளாதரத்தின் தேவைக்கு ஏற்ப வரவு – செலவு அறிக்கையை மாற்றிக் கொள்ளலாம். | சமநிலை வரவு – செலவு அறிக்கை. | |
| | 9. | வருமான மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமநிலை முன் வைக்கப்படுகிறது. | வட்டி வீத மாற்றம் மூலம் சேமிப்பு முதலீடு சமத்துவம் முன் வைக்கப்படுகிறது. | 5 |
| | 10 | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. | சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. | |
| | 11 | வட்டி வீதம் மாறிக்கொண்டே உள்ளது. | வட்டி வீதம் மாறாதது. | |
| | 12 | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது. | |
| | 13. | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக்கொடுப்பதற்கான வெகுமதி | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி | |
| | | | (ஏதேனும் ஐந்து) | |

| | | |
|---|---|---|
| 44 (அ) | <u>பணத்தின் முதன்மை பணிகள்</u><br>1. பரிவர்த்தனை கருவி<br>2. மதிப்பின் அளவு கோல்.<br><u>பணத்தின் இரண்டாம் நிலை பணிகள்</u><br>1. மதிப்பின் நிலைகலன்<br>2. வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை.<br>3. வாங்குதிறனை மாற்றி கொள்ளும் ஒரு கருவியாக செயல்படுகிறது. | 2 |
| | <u>துணை பணிகள்</u><br>1. கடனுக்கான அடிப்படை<br>2. தேசிய வருவாய் பங்கீட்டிற்கு உதவுகிறது.<br>3. இறுதிநிலைப் பயன்பாடுகள் மற்றும் இறுதிநிலை உற்பத்தி திறன்களை ஒப்பிடவும் பயன்படுகிறது.<br>4. மூலதனத்தின் உற்பத்தி திறனை உயர்த்துகிறது.<br><u>இதர பணிகள்</u><br>1. திரும்பச் செலுத்தும் திறன்<br>2. பொதுமைப்படுத்தப்பட்ட வாங்கும் திறனை குறிக்கிறது.<br>3. மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையை தருகிறது.<br>**(அல்லது)** | 3 |

44 (ஆ)

| | உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|---|
| | | பல நாட்டின் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான வாணிகம். |
| 2 | உழைப்பு மற்றும் மூலதனம் ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம் பெயர்தல். | உழைப்பு மற்றும் மூலதனம் நாடுகளுக்கிடையே இடம் பெயர்தல் தடைகளுக்குட்பட்டது. |
| 3 | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை. | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலை சுங்கவரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் கடினமாக்குகின்றன. |
| 4 | ஒரே ஒரு பணம் மட்டுமே. | பல நாட்டு பணங்கள். |
| 5 | புவி அமைப்பு மற்றும் காலநிலை சூழல் கிட்டதட்ட ஒரே மாதிரி இருக்கும். | புவி அமைப்பு மற்றும் காலநிலை வேறுபடும் இயல்பு கொண்டவை. |
| 6 | வாணிக மற்றும் நிதி நடைமுறைகள் ஒரே மாதிரியானவை. | வாணிகம் மற்றும் நிதி நடைமுறைகள் வேறுபடும். |
| 7 | அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அரசின் கொள்கைகளில் வேறுபாடில்லை. | வேறுபாடுகள் இருக்கும். |

**(ஏதேனும் ஐந்து)** — 5

| | | |
|---|---|---|
| 45 (அ) | <u>திட்டமிடுதலின் வகைகள்</u> **(ஏதேனும் 5 விளக்கத்துடன்)**<br>1. மக்களாட்சி மற்றும் சர்வாதிகாரத் திட்டமிடல்.<br>2. மையப்படுத்தப்பட்ட மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டமிடல்.<br>3. வழிகாட்டும் மற்றும் தூண்டும் திட்டமிடல்.<br>4. சுட்டிக்காட்டும் மற்றும் கட்டாய திட்டமிடல்.<br>5. குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால திட்டமிடல்.<br>6. நிதி திட்டமிடல் மற்றும் உருவப்பொருள் திட்டமிடல்.<br>7. பணிகள் திட்டமிடல் மற்றும் கட்டமைப்புத் திட்டமிடல்.<br>8. விரிவான மற்றும் பகுதித் திட்டமிடல்.<br><br>**(அல்லது)** | 5 |
| 45 (ஆ) | <u>பணவியல் கொள்கையின் நோக்கங்கள்</u> **(ஏதேனும் 5 விளக்கத்துடன்)**<br>1. பணத்தின் நடுநிலைத் தன்மை.<br>2. விகித நிலைத்தன்மை.<br>3. விலை நிலைத் தன்மை.<br>4. முழு வேலைவாய்ப்பு.<br>5. பொருளாதார வளர்ச்சி.<br>6. செலுத்துச் சமநிலையில் சமநிலையை பேணுதல். | 5 |
| 46 (அ) | **<u>GST</u>**<br>• இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு மறைமுக வரிகளுக்கு மாற்றாக சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் பாராளுமன்றத்தில் 2017, மார்ச் 29ல் நிறைவேற்றப்பட்டு 2017 ஜீலை 1 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது<br>• பண்டங்கள் மற்றும் பணிகள் அளிப்பின் மீது விதிக்கப்படும் மறைமுக வரியாகும்.<br>• நாடு முழுவதற்குமான ஒரே மறைமுக வரியாக GST உள்ளது<br><u>நன்மைகள்</u><br>• வரி மீதான வரி இம்முறையில் நீக்கப்படுவதால் பொருட்களுக்கான செலவு குறைகிறது.<br>• பதிவு செய்தல், வரித்தாக்கல் செய்தல் கூடுதலாக செலுத்தியதை திரும்பப்பெருதல் கோரிய விளக்கங்களுக்கு பதிலளித்தல் போன்ற அனைத்து செயல்பாடுகளும் விரைவாக நடைபெறுகிறது.<br><br>**(அல்லது)** | 3<br><br>2 |

| | | |
|---|---|---|
| 46 (ஆ) | <u>நிலமாசுவிற்கான காரணங்கள்</u><br>1. காடுகளை அழித்தல்.<br>2. விவசாய நடவடிக்கைகள்.<br>3. சுரங்கத் தொழில்கள்.<br>4. மண்ணில் புதைத்தல்.<br>5. தொழில்மயமாதல்.<br>6. கட்டுமானப் பணிகள்.<br>7. அணுமின் விரயங்கள்.<br>(ஏதேனும் மூன்று விளக்கத்துடன்)<br><br><u>நில மாசுவிற்கான தீர்வுகள்</u> <u>(ஏதேனும் நான்கு)</u><br>1. மக்களுக்கு குறைத்தல், மறுசுழற்சி, மறு பயன்படுத்துதல் பற்றி உரிய அறிவுரைப் புகட்டுவது.<br>2. இயற்கையாகவே அழிந்து மண்ணுக்கு சேதம் விளை விக்காத பொருள்களைப் பயன்படுத்துவது.<br>3. பூச்சிக் கொல்லி மருந்துகளை குறைந்த அளவில் பயன்படுத்துதல்<br>4. பலவகைப் பயிர்களை பயிரிட்டு மண் வளம் காத்தல், பயிர் சுழற்சி முறை மண்ணின் வளத்தை கூட்டும் என்கிறார்கள்.<br>5. தேவையில்லாத குப்பைகளை எரித்தோ அல்லது புதைத்தோ அப்புறப்படுத்துதல்<br>6. மிகக் குறைவான நெகிழிப் பொருட்களை பயன்படுத்துதல் | 3<br><br><br><br><br><br><br><br>2 |
| 47 (அ) | <u>காரல் பியர்ஷனின் ஒட்டுறவுக்கெழு</u><br>1. <u>அட்டவணை</u><br>2. <u>சூத்திரம் மற்றும் செய்முறை</u><br>3. <u>விடை</u> $r = 0.9955$<br>**<u>(அல்லது)</u>** | 3<br>1<br>1 |
| 47 (ஆ) | **<u>பொது நிதி எல்லை</u>**<br>1. பொது வருவாய்<br>2. பொது செலவு<br>3. பொதுகடன்<br>4. நிதி நிர்வாகம்<br>5. நிதி கொள்கை **– விளக்கத்துடன்** | 1<br>1<br>1<br>1<br>1 |